2015 செப்டம்பர் 29]

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதனைக் கொடுத்து ஒரு மாதத்திற்கு மேல் ஆகிவிட்டது. அதனை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளுங்கள். இன்றைக்கு டெல்டா மாவட்டத்தில் கடை அடைப்பு எல்லாம் நடந்து கொண்டிருக்கின்றது. தயவுசெய்து காவேரி பிரச்சினையை நீங்கள் எடுத்துக்கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், என்னவென்று சொல்லுங்கள்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரி டெல்டா பகுதி இன்றைக்கு கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்றது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உங்களுக்கு நான் வாய்ப்புத் தருகிறேன்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடகா நமக்கு உரிய காவேரி நீரை வழங்க மறுத்துள்ளது. நேற்றையதினம் காவேரி நதி நீர்ப் பங்கீட்டு மேற்பார்வைக் குழுக் கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில்கூட கர்நாடக அரசு தன்னிச்சையாக தண்ணீர் வழங்க முடியாது என்று சொல்லியிருக்கின்றார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் அதற்கு பதில் சொல்லிவிடட்டும். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், என்ன? (குறுக்கீடு) மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

(ஆ) சத்துணவு ஊழியர்கள் பிரச்சினை—தொடர்ச்சி

***மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் சத்துணவு ஊழியர்கள், மாண்புமிகு தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், ஒரு நிமிடம் இருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் என்னவென்று சொல்லுங்கள்?